# பேராசிரியர் எ. சுப்பராயலு

- ஆ. சிவசுப்பிரமணியன்

துடிப்புடனும், அமைதியுடனும் ஆழமாகச் செயல்பட்டு வரும் நம் சமகால வரலாற்றறிஞர்கள் ஒரு சிலருள் பேராசிரியர் சுப்பராயலுவும் ஒருவர். நீலகண்ட சாஸ்திரியை அடுத்து இடைக்காலச் சோழர்கள் தொடர்பான ஆய்வில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்து வருபவர். அதே நேரத்தில் பழைய தடத்தில் பயணிக்காது, வேறுபாடான கோணத்தில் வரலாற்றை அணுகிவருபவர். இந்த இதழில் இவரைச் சந்திப்போம்.

### வாழ்க்கைக் குறிப்பு

திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டத்தில் அடங்கிய சின்னக்கலையம்புத்தூர் என்ற கிராமத்தில் 5-12-1940 இல் வேளாண் குடும்பத்தில் பிறந்த இவர், தம் உயர்நிலைப் பள்ளிப் படிப்பைப் பழனியிலும், இயற்பியலில் இளம் அறிவியல் படிப்பை மதுரையிலும் முடித்தார்.

பண்டையவரலாறு தொல்லியலில் முதுகலைப் பட்டத்தையும் எம்.லிட், பட்டத்தையும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பெற்றார். எம்.லிட். பட்டத்திற்காக அவர் தேர்வு செய்த தலைப்பு 'சோழ நாட்டின் அரசியல் புவியியல்' என்பதாகும்.

பின் மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் 'இடைக்காலத் தமிழகத்தில் அரசு' என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்றார்.

பின்னர் அரசுக் கலைக்கல்லூரியிலும், மதுரைக் காமரசர் பல்கலைக் கழகத்தின் வரலாற்றுத் துறையிலும் விரிவுரையாளராகப் பணியாற்றிவிட்டு தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் கல்வெட்டியல் தொல்லியல் துறையில் பேராசிரியராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

பின்னர் ஜப்பான் நாட்டின் டோக்கியோ பல்கலைக் கழகத்தின் கீழைத்தேய வரலாற்றுத் துறையிலும் பாரிஸ் பல்கலைக் கழகத்திலும் வருகை தரு பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். புதுச்சேரி பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தின் வரலாற்றுத்துறையின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

தாய்லாந்து, வியட்நாம், லாவோஸ், மலேஷியா, இந்தோனேசியா, கம்போடியா, சிங்கப்பூர், ஸ்ரீலங்கா, மியான்மர் ஆகிய நாடுகளுக்கு ஆய்வுப் பணிகளுக்காகச் சென்றுள்ளார்.

### வரலாற்றுப் பணி

பேராசிரியர் சுப்பராயலுவின் வரலாற்றுப் பணிகளை (1) பார்வை நூல் உருவாக்கல் (2) அமைப்புகளையும் ஆய்வு மாணவர்களையும் உருவாக்கல் (3) ஆய்வுத் திட்டங்களை மேற்கொள்ளல் (4) ஆய்வு நூல்களையும் கட்டுரைகளையும் எழுதி வெளியிடல் என நான்காகப் பகுக்கலாம்.

எந்த அறிவுத் துறைக்கும் இன்றியமையாத ஒன்றாக அமைவது அத்துறை சார்ந்த அகராதிகளாகும். ஆனால் தமிழ்மொழியைப் பொருத்த அளவில் மொழிசார்ந்த அகராதிகளைத்தவிர பிற அறிவுத்துறை சார்ந்த அகராதிகள் உருவாக்கம் வளர் நிலையிலேயே உள்ளது. பல்வேறு அறிவுத் துறை சார்ந்த அகராதிகளை உருவாக்குவதில் ஆர்வம் காட்டிவந்த தமிழ்ப் பல்கலைக் கழகம் தற்போது அதில் ஈடுபாடு காட்டுவதாகத் தெரியவில்லை.

முதன் முறையாகத் தமிழ் - ஆங்கில லெக்சிகனையும், ஆங்கிலத் தமிழ் அகராதியையும்



வெளியிட்ட சென்னைப்பல்கலைக்கழகம் நாற்பது ஆண்டுகள் கடந்தபின்னரும் திருத்தம் இன்றி அப்படியே மறுபதிப்பு மட்டும் செய்து வருகிறது.

தமிழக வரலாற்றின் முக்கிய சான்றாக அமைவது கல்வெட்டுகளும் செப்பேடுகளும்தான். கி.பி.550 முதல் 850 வரையிலான காலம் தொடங்கி, கல்வெட்டுகளும் செப்பேடுகளும் எண்ணிக்கையளவில் வளரத் தொடங்கியதாகக் குறிப்பிடும் சுப்பராயலு, 'உலகில் வேறு எங்கும் எப்போதும் கண்டிராத அளவில்;' 10-13 நூற்றாண்டுகளில் கல்வெட்டுகளின் எண்ணிக்கை உயர்ந்ததாகக் கூறுவார். அவரது கணக்குப்படி தமிழ்நாட்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளின் எண்ணிக்கை (கி.பி.550 முதல் 1900 வரை) 26000 ஆகும். செப்பேடுகளின் எண்ணிக்கை 560 ஆகும். 2001 இல் இக்கட்டுரையை அவர் எழுதிய பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட, கல்வெட்டுகள், செப்பேடுகளின் எண்ணிக்கை இதில் அடங்கவில்லை இன்னும் பதிவு செய்யப் படாதவையும் உண்டு.

கல்வெட்டுகளும் செப்பேடுகளும் தனித்த மொழிநடையையும், கலைச் சொற்களையும் கொண்டுள்ளன. வழக்கமான தமிழ் அகராதிகளின் துணைகொண்டு இவற்றின் பொருளைத் தெளிவாக அறியமுடியாது. கல்வெட்டில் பயின்று வரும் சொற்களுக்கெனத் தனித்த அகராதி தேவை.

சிர்க்கார் என்பவர் தமிழ் உள்ளிட்ட இந்திய மொழிக்கல்வெட்டுச் சொற்களுக்கென ஆங்கிலத்தில் அகராதி ஒன்றை வெளியிட்டுள்ளார். இது முழுமையானதாக அமையவில்லை.

கல்வெட்டியலாளர் தி.நா.சுப்பிரமணியன் தாம் தொகுத்துப்பதிப்பித்த 'தென்னிந்தியக் கோவில் சாசனங்கள்' என்ற தொகுப்பு நூலில் ஆங்கில அகரவரிசையிலும், தமிழ் அகரவரிசையிலும் கல்வெட்டு அகராதி ஒன்றை இணைத்துள்ளார். இதுவும் முழுமையானதல்ல. ஏனெனில் அகராதியில் இடம்பெற்றுள்ள சொல் காணப்படும் கல்வெட்டும் அதன் காலமும் இடம்பெறவில்லை. பொருள் மட்டுமே இடம்பெற்றுள்ளது.

கல்வெட்டாய்வாளர் தி.கோவிந்தராசன் தொகுத்த 'கல்வெட்டுக் கலைச்சொல் அகரமுதலி'

என்ற நூலை ம.கா.பல்கலைக் கழகம் 1987 இல்வெளியிட்டுள்ளது. இதுதான் முறையாகத் தொகுக்கப்பட்ட முதல் கல்வெட்டு அகராதி யாகும். இதில் 7 முதல் 12 ஆம் நூற்றாண்டு வரையிலான தேர்வு செய்யப்பட்ட கல்வெட்டுகளில் இடம்பெற்றுள்ள சொற்களுக்கு மட்டுமே பொருள் தரப்பட்டுள்ளது.

இவற்றின் தொடர்ச்சியாகவும் வளர்ச்சியாகவும் மொத்தம் 530 பக்கங்களில் A4 அளவில் இரண்டு தொகுதிகளாக 'தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி' என்ற தலைப்பில் இவர் தொகுத்த கல்வெட்டு அகராதி 2002 ஆம் ஆண்டில் வெளியாகியுள்ளது. இவ் அகராதியின் அமைப்பு குறித்து பதிப்புரையில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

ஒவ்வொரு சொற்பதிவும் பின்வருமாறு உள்ளது: (1) கல்வெட்டுச் சொல் (தடித்த எழுத்தில்), (2) இலக்கணக்குறிப்பு, (3) பொருள், (4) சொல் வரும் கல்வெட்டின் காலம், (5) மேற்கோள் பாடம் (சாய்வெழுத்தில்), (6) சுட்டுநூல், இலக்கணக் குறிப்பில் பெயர் (பெ), வினை (வி), இடை (இ), உரி (உ) என்ற முதனிலைப் பாகுபாடு மட்டும் காட்டப்பட்டுள்ளது. தொடர்களுக்கு இலக்கணக் குறிப்பு இல்லை. ஒரு சொல்லொடு தொடர்புடைய பிற சொல்லை பிறை அடைப்பில் சமன் குறியீட்டைத் தொடர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது. பொருளில் சந்தேகம் இருந்தால் அப்பொருளுக்குப் பின் கேள்விக்குறி உள்ளது. மேற்கோள் பாடத்தில் தவிர்க்கப்பட்ட அல்லது சிதைந்த பகுதிகள் மூன்று புள்ளிகளால் குறிக்கப்பட்டுள்ளன.

இவ்வகராதி காலமுறை அகராதியாகையால் ஒவ்வொரு சொல்லிற்கும் இயன்றவரை அதன் தனிப்பொருளோடு கூடிய முதல் வரல் (first Hccurrence) ஒவ்வொன்றும் கொடுக்கப்பட்டுள்ளது. சொற்கள் யாவும் கல்வெட்டில் உள்ளபடியே அவற்றின் உருவமைதியைத் திரிக்காமலும் திருத்தாமலும் கொடுக்கப்பட்டுள்ளன. சந்தேகமான பாடம் பிறையடைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு சொல்லின் பல வடிவங்களும் உரிய இடத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இவ்அகராதியில் கி.பி. 400 முதல் 1800 முடிய உள்ள கல்வெட்டுக்களில் இடம்பெற்றுள்ள சொற்களுக்குப் பொருள் தரப்பட்டுள்ளது. கி.பி.400க்கு முந்திய கல்வெட்டுச் சொற்கள் பிற்சேர்க்கையில் இடம்பெற்றுள்ளன.

அச்சில் வெளியான கல்வெட்டுக்கள் சிலவற்றில் அதன் காலம் (ஆண்டு) குறிப்பிடப்படாது இருக்கும். சிலவற்றில் தவறாகக் குறிப்பிடப்பட்டும் இருக்கும். இதனால் இத்தகைய கல்வெட்டுகளைப் பயன்படுத்துவது இடர்ப்பாடானதாய் அமையும். இக்குறையைப் போக்கும் வகையில் அச்சு வடிவம் பெற்றுள்ள கல்வெட்டுக்கள் அனைத்திற்கும் அவற்றின் காலத்தைக் குறிப்பிடும்




அட்டவணை நூல் ஒன்றை இவர் தயாரித்துள்ளார். உறுதியாகக் காலத்தைக் கணிக்க முடியாதவற்றையும் உள்ளபடிப் பதிவு செய்துள்ளார். இது ஓர் அற்புதமான அவசியமான, கடினமான பணி யாகும்.

வரலாற்றாய்வில் ஈடுபடுவோருக்கு அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக அமைவது எழுத்தாவணங்களாகும். ஓலையிலும், காகிதங்களிலும் எழுதப்பட்ட ஆவணங்களை ஆவணக்காப்பகங்களில் மட்டும் தேடிப்பயனில்லை. தனியாரிடமும் இவை இருக்கும் வாய்ப்புள்ளது. இவற்றையே 'தனியார் ஆவணங்கள்' என்பர். ஏற்கனவே சேகரிக்கப்பட்ட ஆவணங்களைப் பயன்படுத்துவதுடன் நின்று விடாமல், முயற்சி எடுத்து, தனியார் ஆவணங்களைத் திரட்டுவதும் ஓர் ஆய்வாளனின் பணியாகும். இவ்வகையில் திருச்சி மாவட்டம் லால்குடி வட்டத்திலுள்ள நெரிஞ்சிலக்குடி கிராமத்தில் ராமாராவ் என்பவரிடமிருந்து ஜப்பான் நாட்டைச் சேர்ந்த வரலாற்றுப் பேராசிரியர் நயித்தோ என்பவர் சென்ற நூற்றாண்டின் எழுபதுகளின் இறுதியில் 72 ஓலை ஆவணங்களைச் சேகரித்தார். பேராசிரியர் சுப்பராயலு பணியாற்றி வந்த தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு இவ்வோலைகளை அவர் அன்பளிப்பாக வழங்கினார். அவர் வழங்கிய 72 ஆவணங்களுள் மிகவும் சிதைந்த நிலையில் இருந்த எட்டு ஆவணங்களை நீக்கி விட்டு எஞ்சிய 64 ஆவணங்களை 'திருச்சிராப்பள்ளி

மாவட்ட ஓலை ஆவணங்கள்' என்ற தலைப்பில் 1991 ஆம் ஆண்டில் தமிழ்ப்பல்கலைக் கழகம் வாயிலாக அவர் வெளியிட்டுள்ளார். இந்நூலின் பதிப்புரையில் இவற்றின் பயன்பாடு குறித்து: "இவைபோன்ற ஆவணங்களைத் தொகுத்துப் பயன்படுத்தினால் அரசு ஆவணங்கள் இதுவரை வரலாற்றுக்குத் தராத பல புதிய செய்திகளைப் பெறலாம் என்பது உறுதி" என்று குறிப்பிட்டுள்ளார். அடுத்து இவ்வோலைகள் கூறும் செய்திகளைக் குறித்து, "சில குடும்பங்கள் மிகுந்த நிலவளம் பெற்றிருக்க, பல நிலமற்றவையாக இருந்தன. பெருநிலக்கிழார்கள் சுகபோகங்களில் திளைத்து, உழைக்காமல் செலவு செய்து வந்ததன் காரணமாக எப்பொழுதும் கடனாளிகளாக இருந்தார்கள். தங்கள் நிலங்களை அடகு வைத்தும், விற்றும் கடன் வாங்கிச் செலவு செய்தார்கள் என்பது வெளிப்படை சமுதாயத்தில் இன்னொரு கோடியில் இருந்தவர்கள் இவர்களை அண்டி அடிமை வாழ்க்கையே கதியென்று இருந்தார்கள். அன்றைய நிலவுடைமைச் சமுதாயத்தின் தலையாய உற்பத்திச் சாதனங்களாக இவர்கள் இருந்தும் கூட தாங்கள் கடன் வாங்கவேண்டுமானால் தங்களையே அடகு வைத்தும் விற்றுமே கடன் வாங்க முடியும். மகன் திருமணத்துக்கென்று கடன் வாங்கிய தந்தை, மகனையும் மருமகனையும் வாழையடி வாழையாக நிலமுதலாளிக்கு அடிமையாக அர்ப்பணிப்பதை ஓர் ஆவணம் (51) ஒளிவு மறைவின்றித் தெரிவிக்கிறது. நிலக்கிழார்கள் இம் 'மனிதச் சொத்துக்களையும்' நிலங்களை விற்பதைப்போல தங்கள் வாழ்க்கை வளத்துக்காக விற்கத் தயங்கவில்லை" -என்று குறிப்பிட்டுள்ளார். இவரது சமூக, வரலாற்றுக் கண்ணோட்டத்தை இப்பகுதிகள் உணர்த்துகின்றன. கல்விப்புலம் சார்ந்த வரலாற்றியலர்கள் பலரிடம் காணமுடியாத வரலாற்றணுகுமுறை இது.

### அமைப்பும் ஆய்வுமாணவர்களும்

வரலாற்றாய்வாளர் என்ற முறையில் இந்திய வரலாற்றுப்பேரவை, இந்தியக் கல்வெட்டியல் கழகம், இந்திய ஊர்ப்பெயர்க் கழகம், தென் இந்திய நாணயவியல் கழகம் என்ற அமைப்புகளில் அவர் உறுப்பினராக இருப்பதுடன் இவற்றுள் சிலவற்றில் சில பொறுப்புகளையும் வகித்துள்ளார்.

இவரது சாதனைகளில் குறிப்பிடத்தக்க ஒன்று 'தமிழகத் தொல்லியல் கழகம்' என்ற அமைப்பை 1991 ஆம் ஆண்டில் உருவாக்கியதாகும். அதன் முதல் தலைவராகவும் இருந்து இவ் அமைப்பை வலுப்படுத்தி உள்ளார். கருத்தரங்குகளையும் சொற்பொழிவுகளையும் நடத்தும் அமைப்பாக மட்டுமின்றி, அவற்றையெல்லாம் எழுத்தாவணமாக மாற்றும் நோக்கில் 'ஆவணம்' என்ற இதழை ஆண்டுக்கொருமுறை இவ் அமைப்பு வெளியிட்டு வருகிறது. இது வரை 27 இதழ்கள் வெளிவந்துள்ளன. 1992 முதல் 1997 வரை இதன் ஆசிரியராக இருந்து பணியாற்றி உள்ளார்.



தாம் உருவாக்கிய அமைப்பு என்பதற்காக தம் வாழ்நாள் முழுவதும் அதன் உயர்பதவிகளில் நீடித்திருக்க விரும்பாது அடுத்தவர்களுக்கு வழி விடும் அவரது பண்பு போற்றுதலுக்குரிய ஒன்றாகும்.

தம் பேராசிரியப் பணியின் ஓரங்கமான ஆய்வு நெறியாளர் பணியினையும் அவர் சிறப்பாகச் செய்துள்ளார், அவரது வழிகாட்டுதலில் பத்து ஆய்வாளர்கள் முனைவர் பட்டமும், இருபது ஆய்வாளர்கள் இளம் ஆய்வாளர் பட்டமும் பெற்றுள்ளனர்.

### ஆய்வுத்திட்டங்கள்

தொல்லியல் அறிஞர் என்ற முறையில் தஞ்சை அருகில் உள்ள வல்லம் என்ற ஊரில் 1984 ஆம் ஆண்டிலும், 1985-1990 காலத்தில் பெரியார் மாவட்டம் கொடுமணலிலும், 1987 ஆம் ஆண்டில் இராமனாதபுரம் மாவட்டம் பெரியபட்டினத்திலும் அகழ் ஆய்வை மேற்கொண்டுள்ளார்.

திருச்சி மாவட்டக் கிராமங்களில் நிகழ்ந்துள்ள சமூகப் பண்பாட்டு மாறுதல்களை ஆய்வு செய்யும் இந்திய-ஜப்பானிய கூட்டுத்திட்டத்திலும், தென் இந்தியாவில் சீனர்கள் நிகழ்த்திய பீங்கான் வணிகம் குறித்த இந்திய-ஜப்பான் ஆய்வுத் திட்டத்திலும் உறுப்பினராக இருந்துள்ளார். இவை தவிர, தென் கிழக்கு ஆசிய நாடுகளுடனும், ஸ்ரீலங்காவுடனும், தென் இந்தியா கொண்டிருந்த வாணிபப் பண்பாட்டுத் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட இந்திய-ஜப்பான் கூட்டுத் திட்டத்திலும் இவர் உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார்.

அடுத்த இதழில் இவரது முக்கிய ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் குறித்த செய்திகளைக் காண்போம்.

- தொடரும்